பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 04 2026** **6 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மகளிருக்கு அதிகாரமளிப்பத்தில் மத்திய அரசுடன் இணைந்து செயல்பட காங்கிரஸ் முன்வர வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ அழைப்பு விடுத்துள்ளார்.

2. நெல் கொள்முதல் தொடர்பாக மாநிலங்களுக்கு மத்திய அரசு வழிகாட்டுதல் மட்டுமே வழங்கியதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. மக்கள் நலத்திட்டங்கள் தொடர மீண்டும் திமுக அரசு அமைய வேண்டியது அவசியம் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. அஇஅதிமுக ஆட்சிப் பொறுப்பேற்றால் விவசாயத்திற்கு தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி உறுதியளித்துள்ளார்.

5. இந்தியா - அர்ஜென்டினா அணிகளுக்கு இடையிலான மகளிர் ஹாக்கிப் போட்டி இன்று நடைபெற உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மகளிருக்கு அதிகாரமளிப்பத்தில் மத்திய அரசுடன் இணைந்து செயல்பட காங்கிரஸ் முன்வர வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ அழைப்பு விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவையிலும் மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு ஏற்பாடு செய்ய உள்ள நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவுக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

கடந்த **2023**ஆம் ஆண்டு நாடாளுமன்ற இரு அவைகளிலும் இந்த மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதை அந்தக் கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**2011**ஆம் ஆண்டு கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில் தொகுதி மறுவரையை மேற்கொண்டு **2029**ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்பு மகளிர் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதாக அதில் திரு. ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நெல் கொள்முதல் தொடர்பாக மாநிலங்களுக்கு மத்திய அரசு வழிகாட்டுதல் மட்டுமே வழங்கியதாகவும், உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை என்றும் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக எழுந்துள்ள விவாதங்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் சமூக வலைதளத்தில் விளக்கம் அளித்துள்ளார்.

பருப்பு மற்றும் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநிலங்கள் தங்களது ஊக்கத்தொகை கொள்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை மட்டுமே வழங்கப்பட்டதாகவும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

மாநிலங்கள் தங்களது விவசாய கொள்கைகளை தேசிய முன்னுரிமையுடன் இணைத்து செயல்பட வேண்டும் என்பதே இதன் நோக்கம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் தற்போது அமல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்கள் தொடர மீண்டும் திமுக அரசு அமைய வேண்டியது அவசியம் என்று அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் திமுக இடம்பெற்றிருந்தபோது தமிழகத்திற்கு தேவையான பல முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்தார்.

சேலத்தில் புதிய ரயில்வே கோட்டம் அமைத்தது, கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கம், நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டவை அதில் அடங்கும் என்றும் அவர் கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளில் திமுக ஆட்சியில் மாநிலத்தில் பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு புதிதாக 10 ஆயிரம் பேருந்துகள் சேர்க்கப்பட்டதையும் திரு. ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் அஇஅதிமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால் விவசாயத்திற்கு தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பூம்புகார் அருகே செம்மனார்கோவில் பகுதியில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

கங்கை நதியைப் புணரமைப்பது போன்று காவிரி நதியை புணரமைக்க மத்திய அரசிடம் அஇஅதிமுக சார்பில் வலியுறுத்தியபோது அடுத்த ஆண்டே நடந்தாய் வாழி காவேரி திட்டத்தை குடியரசுத்தலைவர் அறிக்கையில் இடம்பெறச் செய்தவர் பிரதமர் திரு. நரேந்திர மோடி என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு மத்திய அரசு அத்திட்டத்திற்கு **11** ஆயிரத்து **600** கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும், காவிரி நதி புணரமைக்கப்பட்டால் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் தூய்மையான நீர் கிடைக்கும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டத்தால் கிராமப்புற மக்களுக்கு ஏற்கனவே கிடைத்த வேலைவாய்ப்பு குறைந்துள்ளதாக மதிமுக பொதுச்செயலாளர் திரு. வைகோ கூறியுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், திமுக ஆட்சி அறிமுகப்படுத்திய மக்கள் நலத்திட்டங்களால் பெண்கள், மாணவர்கள் அதிக அளவில் பயனடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு வாக்குறுதி அளித்தபடி தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகவும், எனவே மாநிலத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமையும் என்றும் திரு. வைகோ நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களுக்கு எதிராக செயல்படும் திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அஇஅதிமுகவுடன் கூட்டு சேர்ந்துள்ளதாக அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம், மன்னார்குடி ஆகிய இடங்களில் நேற்று வாகனப் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், டெல்டா பகுதியில் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டபோது முதலமைச்சர் நேரில் வரவில்லை என்று குற்றம் சாட்டினார்.

திமுக ஆட்சியில் நலத்திட்டங்களை விட முறைகேடுகள்தான் அதிகமாக நடைபெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

இனி தேர்தல் களம்…

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது நாமக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 210 செகண்ட்ஸ்)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரானுடன் கடல் மார்க்கமாக வர்த்தக உறவு கொண்டுள்ள நாடுகள் மீதான பொருளாதாரத் தடை இன்று முதல் அமலுக்கு வரும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

-------------

லெபனான் மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

-------------

இந்தியாவில் பெரும்பாலான சரக்கு கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணை வழியாக பயணிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

-------------

சேலத்தில் தேர்தல் பிரச்சாரத்தின்போது பாமக நிறுவனர் திரு. ராமதாஸ் மயங்கி விழுந்ததால் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

-------------

வேலூரில் நேற்று மூத்த குடிமக்கள் தபால் வாக்கு செலுத்தும்போது முறைகேட்டில் ஈடுபட்டதாக தேர்தல் அலுவலர்கள் 2 பேரை பணியிடை நீக்கம் செய்து மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சுப்புலட்சுமி உத்தரவிட்டுள்ளார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆயிரத்து 353 பேர் நேற்று தபால் வாக்குகளை செலுத்தினர்.

-------------

உலகப் புகழ்பெற்ற தஞ்சாவூர் பெரிய கோவில் சித்திரைத் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

-------------

சட்டப்பேரவைத் தேர்தலில் **100** சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து இளம் வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி நேற்று வேளச்சேரியில் நடைபெற்றது.

-------------

சென்னை மெரினா கடற்கரையில் நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - அர்ஜென்டினா அணிகளுக்கு இடையிலான மகளிர் ஹாக்கிப் போட்டி இன்று நடைபெற உள்ளது.

இந்தப் போட்டி பியூனஸ் அயர்சில் இன்றிரவு மணி **7.30**க்கு தொடங்குகிறது.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **18** ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மும்பையில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **4** விக்கெட் இழப்புக்கு **240** ரன் எடுத்தது.

**241 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய மும்பை அணி, 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 222 ரன் மட்டுமே எடுத்தது.**

**-------------**

**ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி 3-2 என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணியை வென்றது.**

**மற்றொரு போட்டியில் காசி அணி 1-0 என்ற கோல் கணக்கில் முகமதன் அணியை வென்றது.**

**<<<<The End>>>>**